IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No. 87/2020

Deposition of P.W. 2

Name of the Witness: திரு.ஜெயசீலன்

Date : 14.08.2024

**குறுக்கு விசாரணை**

*1*, சாட்சி சொல்ல எனக்கு சம்மன் எதுவும் வரவில்லை. வாதி தான் அழைத்து வந்தார். என்னுடைய பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்கள் வரதராஜ் சொல்லி தான் எழுதப்பட்டது. எனக்கு எழுத படிக்க தெரியாது. வாதி கிரையம் வாங்கிய பத்திரத்தில் நான் கையெழுத்து போட்டேன். சொத்து விற்றவர் பெயர் எனக்கு தெரியாது. நான் பாலக்கோடு டவுனில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் மண்டு கொட்டாய் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் சாட்சி கையெழுத்து போட்ட பத்திரத்தில் இருக்கும் விவரங்கள் எனக்கு தெரியாது. இந்த வழக்கு யார் யார் மீது என்ன பரிகாரம் கேட்டு போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. தெரிந்தவர்கள் கூப்பிட்டால் ஆவணங்களில் சாட்சி கையெழுத்து போடுவேன். எனக்கு எந்த விவரமும் தெரியாது சாட்சி கையெழுத்து போடசொன்னதால் போட்டேன் என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு மாமா உறவு முறை ஆகும். வாதிக்கு ஏற்றவாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.